[1973 பிப்ரவரி 12

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அந்தப் புத்தகங்கள் எந்தெந்த மொழிகளில் வெளியிடப்படுகின்றன? ஹிந்தி மொழியிலும் வெளியிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இதில் மொழிப் பிரச்னைக்கு இடமில்லை: தற்போது வெளியிடப்படுகிற புத்தகங்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் இது போன்ற சிறிய வெளியீடுகள் வெளிநாட்டிலிருந்து பயணிகள் வந்து தங்குகிற ஓட்டல்கள், விடுதிகள் ஆகிய இடங்களில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட முறையில் இங்கேயும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தனியார்த் துறையில் தற்போது இரண்டு புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. "ஆசியன் டிராவலர்ஸ்" என்று ஒரு புத்தகமும், "மெட்ராஸ் காலிங்" என்ற புத்தகமும் வெளியிடப்படுகின்றன. அந்தப் புத்தகங்களில் சென்னையில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றியும், தமிழ்நாட்டிலுள்ள ஒரு பகுதியின் சிறப்பைக் குறித்தும் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. அவைகளை எல்லா ஓட்டல்களிலும், உணவு விடுதிகளிலும் வைத்து விற்றுக்கொண்டு வருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்காக பிரசுரிக்கப்படுகின்ற புத்தகத்தை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை அவ்விடங்களுக்கு அழைத்துச் செல்லவும் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு பாஸ் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. எல்லா சுற்றுலா இடங்களும் தமிழ்நாட்டிற்குள்தான் இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்கள் தங்கள் வசதிப்படி அந்த இடங்களுக்குச் சென்று பார்த்து வருவதில் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

1973 பிப்ரவரி 12]

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சுற்றுலாத் துறையினர் அச்சடிக்கும் அந்தப் புத்தகத்தில் சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மலை வாசஸ்தலம் என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது. நானும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் புறக்கணிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அந்தப் புத்தகத்தில் தமிழ் நாட்டின் ஒரு மிகப் பெரிய சாதனையான கூவம் நதியின் சிறப்பையும் சேர்த்து அச்சடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தகுந்த வகையில் கூவம் நதி ஒரு சிறப்பான இடத்தைத் தற்போது பெற்றுள்ள காரணத்தால், அதுவும் புறக் கணிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடையாறு வாய்க்காலின் குறுக்கே பாலம்.

* 135 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னையில் சென்ட்ரல் பாலிடெக்னிக் பகுதியையும் இந்திரா நகர் பகுதியையும் இணைக்க இரண்டுக்கும் குறுக்கேயுள்ள அடையாறு வாய்க்காலுக்கு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சைதாப்பேட்டைக்கு எளிதில் சென்றுவர வசதியாயிருக்கும் பொருட்டு, இந்திரா நகர் இரண்டா வது அவென்யூவையும், தென் சென்னைப் புற நகர்ப் பகுதியின் மேற்கில் செல்லும் நெடுஞ்சாலையையும் இணைப்பதற்காக பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுவதற்கான செயற் குறிப்புக்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1971 மார்ச்சில் அனுப்பியது. பொருளாதார வகையில் அது இயலாத ஒன்று எனத் தெரியவந்ததால், அச்செயற் குறிப்பு தள்ளி போடப்பட்டது.